பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
09 01 2026 FRIDAY 7.15 PM
ஆகாஷவாணி-செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1. பிரதமர் திரு. நரேந்திர மோடி, மூன்று நாள் பயணமாக நாளை குஜராத் செல்கிறார்.

2. உள்நாட்டு பாதுகாப்பை வலுப்படுத்துவதற்கான, தேசிய IED தரவு மேலாண்மை கட்டமைப்பை உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா இன்று தொடங்கி வைத்தார்.

3. தேசிய கல்விக் கொள்கை, அனைவருக்கும் கல்வி திட்டத்திற்கு புதிய பரிமாணத்தை அளித்திருப்பதாக மத்திய கல்வி அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார்

4. இந்தியா - அமெரிக்கா இருதரப்பு வர்த்தக ஒப்பந்தத்தை நிறைவேற்ற இருநாடுகளும் உறுதிபூண்டுள்ளதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

5. சத்திஷ்கடில் 63 நக்ஸலைட்டுகள் இன்று சரணடைந்தனர்

>>>>>>><<<<<<<

பிரதமர் திரு. நரேந்திர மோடி, மூன்று நாள் பயணமாக நாளை குஜராத் செல்கிறார்.

நாளை மாலை சோம்நாத் கோவிலுக்கு செல்லும் பிரதமர், அங்கு நடைபெறும் ஓங்கார மந்திர பூஜையில் கலந்து கொள்கிறார்.

சோம்நாத் கோவிலில் ட்ரோன் கண்காட்சியையும் அவர் பார்வையிடுகிறார்.

நாளை மறுநாள் சவுர்ய யாத்திரையில் கலந்து கொள்ளும் பிரதமர், சோம்நாத் கோவிலை பாதுகாப்பதற்காக உயிர்த்தியாகம் செய்த வீரர்களுக்கு வீர வணக்கம் செலுத்துகிறார்.

சோமநாதர் ஆலயத்தில் நடைபெறும் சிறப்பு பூஜையிலும், பின்னர் நடைபெறும் சோம்நாத் பெருமை திருவிழா கூட்டத்திலும் கலந்து கொண்டு பிரதமர் திரு. நரேந்திர மோடி உரையாற்றவுள்ளார்.

>>>>>>><<<<<<<

IED வெடிகுண்டு தாக்குதலை தடுத்தல் மற்றும் உள்நாட்டு பாதுகாப்பு கட்டமைப்பை வலுப்படுத்தும் நோக்கில், தேசிய IED தரவு மேலாண்மை கட்டமைப்பை உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா இன்று புதுதில்லியில் காணொலி வாயிலாக தொடங்கி வைத்தார்.

*இந்நிகழ்ச்சியில் பேசிய அவர், புலனாய்வு அமைப்புகளுக்கு இடையே ஒருங்கிணைப்பதற்கு இந்த புதிய அமைப்பு உதவிகரமாக இருக்கும் என்று தெரிவித்தார்.*

*சரியான தகவலை, சரியான நேரத்தில் அளிப்பதற்கான திறன்மிக்க தகவல் கட்டமைப்பாகவும் இது செயல்படும் என்றும் அவர் கூறினார்.*

*IED உபகரணங்கள் தொடர்பாக முறையான தகவல்களை திரட்டி, சம்பந்தப்பட்ட பாதுகாப்பு அமைப்புகளுக்கு காலதாமதமின்றி அளிப்பதற்கு தேசிய IED தரவு மேலாண்மை கட்டமைப்பு துணைபுரியும் என்றும் திரு. அமித் ஷா தெரிவித்தார்.*

*>>>>>>><<<<<<<*

*தேசிய கல்விக் கொள்கை, அனைவருக்கும் கல்வி திட்டத்திற்கு புதிய பரிமாணத்தை அளித்திருப்பதாக மத்திய கல்வி அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார்.*

*இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை எட்டும் வகையில், நாட்டின் கல்வித் திட்டத்தையும், மனித வளத்தையும் மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக தெரிவித்துள்ளார்.*

*அனைவருக்கும் கல்வி திட்டம், முழுமையான கல்வியை அளிப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.*

*ஒவ்வொரு மாநிலமும் இந்த திட்டத்தை செயல்படுத்துவதில், தங்களுக்கென சிறப்பான நடைமுறைகளை வகுத்து செயல்படுத்தி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.*

*கற்றலின் பயன்களை அதிகரிக்கவும், ஊட்டச்சத்தை மேம்படுத்தவும், தேர்வுகளின் சுமையை குறைக்கவும் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் அமைச்சர் கூறியுள்ளார்.*

*12ஆம் வகுப்பு வரை அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் கீழ் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.*

*பள்ளிகளின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கும், தொழில்நுட்பம், மின்னணு தொழில்நுட்பம் போன்றவற்றில் மாணவர்களின் கல்வித்தரத்தை உயர்த்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.*

*கல்விக்கான சிறந்த கட்டமைப்பையும், கற்பித்தலுக்கான ஊதியத்தை வழங்குவதும் அரசின் பொறுப்பு என்றும், மாணவர்களை இடைநிற்றலின்றி கல்வித் திட்டத்தில்*

பயணிக்கச் செய்வதற்கான பொறுப்பு சமூகத்திற்கு உள்ளதாகவும் திரு. தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.

>>>>>>><<<<<<<

வெளிநாடு வாழ் இந்தியர் தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இந்தியாவின் கலாச்சாரத்தையும், பண்பாட்டையும் உலக மக்கள் அறிந்து கொள்ளும் வகையில், வெளிநாடு வாழ் இந்தியர்களை ஒருங்கிணைத்து, இந்நாளை சிறப்பாக கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளை வெளியுறவு அமைச்சகம் மேற்கொண்டுள்ளது.

மகாத்மா காந்தி, தென்னாப்பிரிக்காவிலிருந்து இந்தியா திரும்பிய ஜனவரி 9ஆம் தேதி ஒவ்வோராண்டும் வெளிநாடு வாழ் இந்தியர் தினமாக கொண்டாடப்படுகிறது.

வெளியுறவு அமைச்சகம் இன்று வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், வெளிநாடு வாழ் இந்தியர்களும், வெளிநாடுகளில் உள்ள இந்திய தூதரகங்களும் நாட்டின் கலாச்சாரத்தை உலகிற்கு எடுத்துச் செல்ல வேண்டும் என்று அழைப்பு விடுத்தது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்திய மொழிகள், விழாக்கள், தொன்று தொட்டு கடைபிடிக்கப்படும் இந்திய கலாச்சார மாண்புகள் ஆகியவற்றை இந்திய வம்சாவளியினர் உலகெங்கும் எடுத்துச் செல்வதற்கு ஒரு வாய்ப்பாக இந்த நாள் அமைந்துள்ளதாக அந்த பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>>>><<<<<<<

இந்தியா - அமெரிக்கா இடையேயான இருதரப்பு வர்த்தக ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதில், இருநாடுகளும் உறுதியுடன் இருப்பதாக வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் திரு. ரன்தீர் ஜெய்ஸ்வால் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இருதரப்பிற்கும் பயனளிக்கும் வகையில், சமநிலையிலான வர்த்தக ஒப்பந்தத்தை கொண்டு வருவதற்கு பல சுற்று பேச்சுக்கள் இதுவரை நடைபெற்றுள்ளதாக கூறினார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடியும், அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப்பும், எட்டு முறை தொலைபேசி வாயிலாக பேசியிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

*தொலைபேசி உரையாடல்களின் போது, இருதரப்பு ஒத்துழைப்பிற்கான வேறு பல விஷயங்கள் குறித்தும் விவாதிக்கப்பட்டதாக திரு. ரன்தீர் ஜெய்ஸ்வால் கூறினார்.*

*>>>>>>><<<<<<<*

*பழங்குடியின மக்களின் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்து, அவர்களின் பொருளாதார நிலையை மேம்படுத்த, மத்திய அரசு பிரதமரின் ஜன்மன் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது.*

*தமிழகத்தின் ராணிப்பேட்டை மாவட்டம், ஆற்காடு ஒன்றியத்திற்கு உட்பட்ட ஊராட்சிகளில் இந்த திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட அடிப்படை வசதிகள் தங்களது நிலையை மேம்படுத்தியிருப்பதாக பயனாளிகள் தெரிவித்தனர்.*

*(சவுண்ட் பைட் ஈஸ்வரி - கீதா 40 செகண்ட்ஸ்)*

*>>>>>>><<<<<<<*

*தரநிலைகளின் முக்கியத்துவத்தை மாணவர்கள் புரிந்து கொள்வதற்காக தரநிலைகள் திருவிழா நடத்தப்படுவதாக இந்திய தர நிர்ணய அமைவனத்தின் தெற்கு மண்டல துணை தலைமை இயக்குநர் திரு. எஸ்.கே. கனோக்கியா கூறியுள்ளார்.*

*சென்னையில் இன்று தனியார் பொறியியல் கல்லூரியுடன் இணைந்து நடைபெற்ற தரநிர்ணய விழாவில் கலந்து கொண்டு பேசிய அவர், நாடுமுழுவதும் இதுபோன்ற விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், உயர்கல்வி நிறுவனங்களில் நடத்தப்பட்டு வருவதாக தெரிவித்தார்.*

*கல்வி நிறுவனங்களும், தொழில் துறையும் இணைந்து செயல்படுவதன் மூலம், தரம், புதுமை மற்றும் நீடித்த வளர்ச்சிக்காக கலாச்சாரத்தை உருவாக்க முடியும் என்றும் திரு. எஸ்.கே. கனோக்கியா குறிப்பிட்டார்.*

*இந்நிகழ்ச்சியில் இந்திய தரநிர்ணய அமைவனத்தின் சென்னை அலுவலகத்தின் தலைவர் திரு. தயானந்த் பேசுகையில், மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் தயாரிப்புகளில் பாதுகாப்பு அம்சங்களை இந்திய தரநிர்ணய அமைவனம் உறுதிப்படுத்தி வருவதாக கூறினார்.*

நுகர்வோரின் பாதுகாப்பு மட்டுமின்றி நம்பகத்தன்மை மற்றும் தரத்தை உறுதி செய்வதில் தங்களது அமைப்பு முக்கியப் பங்கு வகிப்பதாகவும் திரு. தயானந்த் தெரிவித்தார்.

>>>>>>><<<<<<<

சத்திஷ்கடில் 63 நக்ஸலைட்டுகள் இன்று சரணடைந்தனர்.

தண்டேவாடா மாவட்டத்தைச் சேர்ந்த இவர்கள், மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் திரு. கவ்ரவ் ராய் முன்னிலையில் சரணடைந்தனர்.

இவர்கள் பற்றிய தகவல் தருவோருக்கு ஒரு கோடியே 19 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் பரிசுத்தொகை வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர் சரணடைந்தவர்களில் 18 பேர் பெண்கள் என்று தெரிவித்தார்.

சரணடைந்த நக்ஸலைட்டுகளின் மறுவாழ்விற்காக சத்திஷ்கர் மாநில அரசு வழங்கிய நிவாரண தொகையையும் திரு. கவ்ரவ் ராய் வழங்கினார்.

>>>>>>><<<<<<<

காஸா மீது, இஸ்ரேல் ராணுவம் இன்று நடத்திய தாக்குதலில் 13 பேர் உயிரிழந்தனர்.

தெற்கு மற்றும் வடக்கு காஸா பகுதியில் ஹமாஸ் அமைப்பினரின் நிலைகள் மீது இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக இஸ்ரேல் கூறியுள்ளது.

இஸ்ரேலுக்கும், ஹமாஸ் அமைப்பினருக்கும் இடையேயான சண்டை நிறுத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் இந்த தாக்குதல் நிகழ்ந்துள்ளது.

காஸாவில் உள்ள எஞ்சிய  பிணைக் கைதிகளையும் மீட்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக இஸ்ரேல் கூறியுள்ளது.

>>>>>>><<<<<<<

தென்கிழக்கு ஆஸ்திரேலியாவில் உள்ள விக்டோரியா மாகாணத்தில் உள்ள வனப்பகுதியில், 30க்கும் மேற்பட்ட இடங்களில் காட்டுத் தீ பரவியுள்ளது.

அப்பகுதிகளை ஒட்டி வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

அப்பகுதிகளைச் சேர்ந்த 3 பேரை காணவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வனப்பகுதிகளில் 40 டிகிரி செல்சியஸ்ஸுக்கும் அதிகமான பகல்நேர வெப்பநிலை பதிவாகியதால், காட்டுத் தீ ஏற்பட்டதாக கூறப்படுகிறது.

மத்திய விக்டோரியாவில் உள்ள Ruffy நகரில் பல வீடுகள் தீக்கிரையாகியுள்ளன.

விக்டோரியா மாகாணத்தில் 4 இடங்களில் காட்டுத் தீ அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

>>>>>>><<<<<<<

மகளிர் பிரிமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் மும்பையில் சற்று நேரத்தில் தொடங்கவுள்ள ஆட்டத்தில் மும்பை – பெங்களூரு அணிகள் மோதுகின்றன.

டாஸ் வென்ற பெங்களூரு அணி முதலில் பந்துவீச தீர்மானித்துள்ளது.

>>>>>>><<<<<<<

தோஹாவில் நடைபெற்று வரும் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்தியாவின் மானவ் தாக்கர், ஸ்வீடனின் Truls Moregard-ஐ எதிர்கொள்கிறார்.

>>>>>>><<<<<<<

ஹாக்கி இந்தியா லீக் போட்டியில், தமிழக அணி - SG Pipers அணிகளுக்கு இடையேயான ஆட்டம் சற்று நேரத்தில் சென்னையில் தொடங்குகிறது.

>>>>>>>END<<<<<<<